# உறையூர் தலமதில்.



உறையூர் என்ற திருத்தலத்தில் இன்றுவந்து ,

உறையும் பெருமாளே உன்தன்பெருமைதனை ;

உரைத்திட வார்த்தைகள் எனக்கில்லையே !

உறையூர் என்ற....

வேழமதைக் காத்திட அன்று வந்தவனே ,

வேழவேந்தன் மகளின் காதலையேற்று - நீயும் ,

மணவாளனாக வந்திருந்து இங்கு அழகிய ,

மணவாளனாகக் காட்சித் தருகின்றவனே !

உறையூர் என்ற....

பேதம் பாராதவன் என்பதனைக் காட்டிடவே ,

பாதம் முதல் கேசம் வரை உன்னைப்பாடிட - நீயும் ,

பாணாழ்வாருக்கு அருளிய உன் கண்ணழகை ,

காணாத கண்களைப் பெற்றென்ன பயனே !

உறையூர் என்ற.........